**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. -4-ராஜேஸ்வரி**

**நாள்.04.01.2024**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**சாட்சி மனு உத்தரவின்படி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவருக்கும் சந்தோஷ் என்பவருக்கும் ஏற்கனவே என் கணவர் முன் பணம் கொடுத்து சந்தோஷ் வேலைக்கு வராததால் முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். என் கணவர் இறந்த அன்று சந்தோஷ்க்கும் என் கணவருக்கும் இடையில் சண்டை நடந்தது என்றால் சரிதான். என்னை போலீசார் என் கணவர் இறந்த அன்று அரசு மருத்துவமனையில் விசாரித்தனர், போலீஸ் விசாரணையில் நான், என் கணவருக்கும், சந்தோஷ் மற்றும் சிரஞ்சீவி ஆகியோருக்கும் என் கணவர் இறந்த அன்று சண்டை நடந்ததாக என் கணவர் என்னிடம் தொலைபேசியில் சொன்னதாக சொல்லியுள்ளேன். என் கணவரை நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் மாலை 04.45-05.00 மணிக்கு போய் பார்த்தேன். அவரை நான் அரசு மருத்துவமனை பிணவறையில் வைத்து பார்த்தேன், அப்போது என்னுடன் ஊர் சொந்த பந்தம் இருந்தார்கள். அப்போது என் கணவர் அணிந்து இருந்த துணிகளில் இரத்தக் கரையிருந்தது, போலீசார் விசாரணையில் என் கணவரை நான் பார்த்த போது அவருக்கு உடம்பில் காயம் ஏற்பட்டு இருந்தது, வயிற்றுக்கு கீழே காயம் ஏற்பட்டு இருந்தது என்று சொல்லியுள்ளேன். கங்காதரன் என்பவர் எனது உறவினர். தவமணி என்பவர் என்னுடைய உறவினர். கங்காதரன் சொன்ன பின்பு தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும். கங்காதரன் ஓட்டி வந்த வாகனம் எங்கு இருக்கிறது என்று என்னிடம் சொல்லவில்லை. கங்காதரன் நடக்காத சம்பவத்தை நடந்ததாக என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு எற்பட்ட காயங்கள் கங்காதரன் மதுபோதையில் வண்டி ஓட்ட தெரியாமல் ஓட்டி கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல. கங்காதரனுக்கு வண்டியில் இருந்து கீழே விழுந்து கம்பிகள் குத்தியதால் தான் முதுகில் காயம் பட்டது என்றால் சரியல்ல.

**3 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவர் இறந்த விபரம் போலீசார் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்து விட்டதாக போனில் தகவல் கிடைத்தது, யார் சொன்னார்கள் என்று தெரியாது. கங்காதரனை எங்கே பார்த்தேன் என்றால் மருத்துவமனையில் பார்த்தேன். என் கணவரை பார்த்த போது நான் கங்காதரனை

பார்க்கவில்லை. அதற்கு முன்பே அவரை நான் பார்த்து விட்டு வந்தேன். கங்காதரன் அந்த மருத்துமனையில் சிகிச்சையில் இருக்கிறார் என்று எப்படி தெரியும் என்றால் போனில் தகவல் கிடைத்து நான் மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். என் கணவருக்கும் 3ம் எதிரி முருகேசனுக்கும் இதற்கு முன்பு எந்த பிரச்சனையும் இல்லை. 3ம் எதிரி முருகேசன் என் கணவரை கொலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், போலீசார் அவரை இந்த வழக்கில் மிகைபடுத்தி சேர்த்துள்ளார்கள் என்று சொல்வது சரியல்ல. இந்த வழக்கிற்கும் 3ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், கேள்விப்பட்டதை வைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவதன்று என் கணவர் சென்ற வாகனம் யாருடைய வாகனம் என்று எனக்கு தெரியாது. எங்கே மற்றும் யாருடன் போகிறேன் என்று என் கணவர் என்னிடம் சொல்லவில்லை, போகும் போது என் கணவர் தனியாக தான் போனார்.

<u>**மறுவிசாரணை– இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.04 17:27:13 +0530

Additional District Judge,

Dindigul.